**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI**
**OS No. 33/2024**

**2025**ம் வருடம் ஜுலை திங்கள் 11ம் நாள் வாதி தரப்பில் 1வது சாட்சியத்தின் வாக்குமூலம் 1873ம் ஆண்டு 10வது விதியின் படி திரு. V.மனோஜ்குமார், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் : திரு.முருகபூபதி (PW1) கிராமம்:
கணவர் பெயர் : கண்ணுச்சாமி தொழில் :
வயது :

<u>முதல் விசாரணை:-</u>

1. நான் இவ்வழக்கின் வாதியாவேன். என் தரப்பு வாய்மொழி சாட்சியத்தை எழுத்துமூலமான பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். இந்த பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் என்னுடைய அறிவுக்கு முழுமையாய் தெரிந்த மட்டிலும் உண்மை என்று உறுதி கூறி இந்த பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள விபரங்களை எனது முதல் விசாரணையாக ஏற்றுக்கொள்ள பிரார்த்திக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

2. தாவா சொத்தைப் பொறுத்து வாதியின் தந்தை கண்ணுச்சாமி பெயரிலான நத்தம் நிலவரி திட்ட தோராய பட்டாவின் அசல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 20.12.2023ம் தேதியிட்ட தாவா சொத்தை வாதியின் தந்தை கண்ணுச்சாமி வாதிக்கு எழுதிக் கொடுத்த இனாம் செட்டில்மெண்ட் ஆவணத்தின் அசல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. தாவா சொத்தைப் பொறுத்து வாதி பெயரிலான நத்தம் நிலவரி திட்ட துாய சிட்டாவின் அசல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. 1ம் பிரதிவாதி மோசடியாக 2ம் பிரதிவாதி மூலம் சொத்தில் வரிவிதிப்பை ஏற்படுத்திக் கொண்டார் என்பதை இரத்து செய்யக்கோரி வாதியானவர் 2முதல் 4 பிரதிவாதிகளுக்கு அனுப்பி வைத்த புகார் மனுவின் அலுவலக நகல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. 08.05.2024ம் தேதியிட்ட மேற்படி புகார் மனுவை 2 முதல் 4

பிரதிவாதிகளுக்கு வாதி அனுப்பி வைத்ததற்குண்டான அஞ்சலக இரசீதுகள் எண்ணம்–3 வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. 09.05.2024 ம் தேதி மேற்படி புகார் மனுவை 2 முதல் 4 பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை எண்ணம்–3 வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(ஒம்./–திருமதி. G. தங்க கார்த்திகா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.